**<u>2026 மார்ச் மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 19/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 19/2024 | பெயர்: ஆறுமுகம்<br>த/பெ.நவுணான் | PW4 | 25.03.2026 |

(2, 6 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1, 3, 4, 5, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

**<u>சாட்சி Crl.M.P. 22/2026 மனு 05.03.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 2, 4 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் மருந்துகள் கட்டுப்பாட்டு துறையில் நான் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தேன் என்றால் சுமார் 22 ஆண்டுகளாக பணிபுரிந்தேன். தேனி சரக ஆய்வாளர் என்னிடம் சமர்ப்பித்த ஆய்வறிக்கை மற்றும் விசாரணை அறிக்கை ஆகியவற்றை நான் சரிவர பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். 2 முதல் 8 வரையிலான எதிரிகள் மருந்துப் பொருட்களை வாங்கி விற்பனை செய்ய முறையாக உரிமம் பெற்று நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி மருந்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உரிமம் பெற்றிருந்தார் என்றால் நான் பரிசீலனை செய்த காலத்தில் 1வது எதிரியின் உரிமம் ரத்து செய்யப்பட்டு இருந்தது.

2. மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் 1வது எதிரிக்கு மருந்துகள் தயாரிக்க உரிமம் வழங்கியுள்ளார் என்றால் சரிதான், எனது விசாரணையின்போது ரத்து செய்யப்பட்டிருந்தது. எந்த தேதியில் ரத்து செய்தேன் என்றாலும், ரத்து ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரத்து செய்ய எனக்கு அதிகாரம் இல்லை, மருந்துகள் கட்டுப்பாட்டு இயக்குநர் ரத்து செய்துள்ளார். ரத்து செய்யப்பட்டுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. மருந்துகள் கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்திலிருந்து

28.04.2014 ம் தேதியிட்ட அ.சா.ஆ.139 கடிதம் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

3. அந்த கடிதத்தில் கோப்புகள் ஒரு வருடமாக நிலுவையில் இருந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் என்னிடம் நிலுவையில் இல்லை. அந்த சமயத்தில் நான் உதவி இயக்குநராக மதுரையில் இருந்தேன். வழக்கிற்காக நான் அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தேனி சரக மருந்துகள் ஆய்வாளர் இவ்வழக்கு சம்பந்தமாக எதிரிகள் மீது வழக்குத் தொடர அனுமதி வேண்டி ஓர் அறிக்கையை என் மூலமாக அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அந்த அறிக்கையை நான் படித்து பரிசீலனை செய்தேனா என்றால் ஞாபகமில்லை.

4. சட்டப்பூர்வமாக ஆராயாமல் இயந்திரத்தனமாக அறிக்கை அனுப்பினேன் என்றால் சரியல்ல. பொதுவாக மருந்துப் பொருட்களை மாதிரி எடுக்கும்போது அந்த பொருளின் தரம் குறித்து அறிய வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை, சந்தேகம் ஏற்பட்டால் மாதிரி எடுப்போம். அந்த மாதிரியை பகுப்பாய்விற்கு பின்னர் தான் தரம் குறித்து அறிய முடியும் என்றால் சரிதான். எனது துறைக்கும் 1வது எதிரிக்கும் உரிமம் பற்றிய கடிதப் போக்குவரத்து சம்பந்தமாக 2 முதல் 8 எதிரிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். மருந்துகள் உரிமம் ஒப்படைப்பு சம்பந்தமான விதிமுறைகளை கடைப்பிடிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2 முதல் 8 வரையிலான எதிரிகளுக்கு சம்பந்தம் இல்லாமல் அவர்கள் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.03.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.25 18:27:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.03.2026